DECEMBER 2023 **P/ID 35325/PTL3R**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. கவின் கலை – சொற்பொருள் சுட்டுக.

2. ஒப்பியல் இலக்கியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

3. 'கவிதை கிழக்கும் மேற்கும்' என்னும் நூலினை எழுதியவர் யார்?

4. கலித்தொகை – பெயர்க் காரணம் கூறுக.

5. முருகியல் என்றால் என்ன?

6. ஆசிரியப்பாவின் வேறு பெயர் யாது?

7. பிசி எவ்வாறு அமையும்?

8. கையறு நிலை என்றால் என்ன?

9. சிலப்பதிகாரம் – பெயர்க் காரணம் கூறுக.

10. மண நூல் எனப்படும் காப்பியம் எது?

11. பாரதியின் முப்பெரும் பாடல்கள் யாவை?

12. வால்ட் விட்மனை அறிமுகப்படுத்துக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. அடிக் கருத்து என்பது யாது?

14. ஆற்றுப்படை நூல்களின் அமைப்பை எடுத்துரைக்க.

15. போலச் செய்தல் குறித்து விளக்குக.

16. அகப் பாடலில் கதைமாந்தரின் இயற்பெயர் கூடாது – ஏன்?

17. மாற்று வடிவம், மீட்டுருவாக்கம் ஆகியன பற்றி விளக்குக.

18. இலக்கியத்திற்குக் கற்பனை தேவையா?

19. பொதுமை இலக்கியம் – விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. இலக்கியக் கொள்கைகளை உருவாக்க ஒப்பிலக்கியம் வாய்ப்பாகுமாற்றை எடுத்துரைக்க.

21. வள்ளுவரின் பொருளியல் கொள்கைகளை வெளிப்படுத்துக.

22. தொல்காப்பிய வழி இலக்கியங்களை வகைப்படுத்துக.

23. பிரான்சு ஒப்பிலக்கிய ஆய்வுப் போக்கை எழுதுக.

24. தமிழக ஒப்பிலக்கிய முன்னோடிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.

———————